# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.64/2020

2025 -ம் ஆண்டு ஜுன் மாதம் 17 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.06.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேஷ் (PW -1) | வயது | : | 45/2025 |
| க/த பெயர் | : | திரு. கலியபெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | : | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்து சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சரிதான், அதில் பிரதிவாதிக்கு ஆதரவாக பஞ்சாயத்து பேசியதால் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. எனது அப்பா குறைவான விலைக்கு தாவா சொத்தினை விற்பனை செய்ததால் அதிக பணம் கேட்டு பிரதிவாதி தராததால் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசியதன் சம்பந்தமாக கிராமத்தில் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்தார்களை விசாரித்தால் என்ன பேசினார்கள் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தானது பிரதிவாதியின் மாமனாரான மாயகிருஷ்ணன் காலத்திலிருந்து பிரதிவாதியின் அனுபோகத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மாயகிருஷ்ணன் உயிருடன் இருந்த காலத்தில் சொத்தினை ஒப்படைக்க வேண்டி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், அவரிடம் கேட்டேன் காலம் கடத்தினார். அவர் உயிருடன் இருந்த காலத்திலோ அல்லது அவர் இறந்துபோன பின்னரோ வழக்கு தாக்கல் செய்ததற்கான கால வரையறை கடந்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த சமயத்தில் எங்களுக்குள் பிரச்சனை எதுவும் இல்லை, அதனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

3. மாயகிருஷ்ணன் இறந்ததற்கு பின்னர் நான் பிரதிவாதியிடம் சென்று சொத்தை ஒப்படைக்க வேண்டி பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதியிடம் பிரச்சனை ஏற்படுத்தியது சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்னர் என்றால் சரிதான். தாவா சொத்தானது மாயகிருஷ்ணன் காலத்திலிருந்து வாதியின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். (**தற்போது சாட்சியானவர் சொத்து தங்களிடம் இருந்ததை பிரதிவாதியானவர் அடைத்து வைத்துள்ளார் என்று சொல்கிறார்.**) அதனால் நான் குறிப்பிட்ட வருடத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்திற்கு தெற்கில் எனது சித்தப்பா செல்வராஜ் மனை உள்ளது என்றால் சரிதான். செல்வராஜ் சொத்தின் வழியாக தான் தாவா சொத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். செல்வராஜ் அவருக்கு சொந்தமான சொத்தை பிரதிவாதியின் மகன் சிவாவிற்கு கிரயம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். செல்வராஜ் சொத்தினை கிரயம் செய்வதற்கு முன்பு மாயகிருஷ்ணனிடமும், பிரதிவாதியான ராணியின் அனுபோகத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

5. செல்வராஜ் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது அவரது சொத்தினை சிவாவிற்கு கிரயம் செய்வதற்கு முன்பு மாயகிருஷணன், பிரதிவாதி ராணியின் அனுபோகத்தில் இருந்து வந்தது என்று சாட்சியம் அளித்துள்ளதால் நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்து எனக்கு செட்டில்மெண்ட் எழுதியதன் பேரில் எனக்கு சொந்தமான சொத்து என்பது எனது கட்சி என்றால் சரிதான்.

6. எனது தகப்பனார் 20.09.2018 ல் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு முன்பே எனது தகப்பனார் பிரதிவாதியன் மாமனார் மாயகிருஷ்ணனுக்கு வாய்மொழி வழியாக கிரயம் கொடுத்துவிட்டதால் அதன்படி மாயகிருஷ்ணன் இறக்கும் வரை தாவா சொத்தினை அனுபோகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. மாயகிருஷ்ணனுக்கு எங்கள் தரப்பில் எந்த வித ஆவணமும் எழுதி தராத சூழ்நிலையில் நான் சாதகமாக கொண்டு பிரதிவாதியானவர் ஆதவற்ற

பெண்ணாக இருப்பதால் சொத்தை வசப்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டமிட்டு அதற்கு தோதாக எனது பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொண்டு பொய்யாக சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல.

7. எனது பெயரில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள விபரங்களை யார் சொல்லி எழுதியது என்றால் எனது தகப்பனார், எனது அம்மா சொல்லி எழுதினார். அதனால் எனது தகப்பனார் வாய் பேசமுடியாது என்பதை நான் பயன்படுத்தி கொண்டு நான் எனது அம்மாவும் மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எழுதப் படிக்க தெரியாதவர் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தகப்பனார் கைரேகை வைத்து தான் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது அம்மா சாட்சியாக கையெழுத்து இடவில்லை என்றால் சரியல்ல.

8. செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து பற்றிய விபரங்களை நானும் எனது அம்மாவும் சொல்லி தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அதனால் இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள விபரம் எனது தகப்பனாருக்கு தெரியாது என்றால் சரியல்ல. மோசடியாக நான் எனது தகப்பனாரை அழைத்து சென்று மோசடியாக இந்த ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எழுத படிக்க தெரியாது என்பதால் இந்த ஆவணத்தில் என்னிடம் படித்து காண்பித்தார்கள் நான் சரியன்று ஒப்புக் கொண்டு கையெழுத்து இட்டுள்ளேன் என்று ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மோசடியாக தயார் செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்பதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. மோசடியாக தயார் செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்தானது

எனது தகப்பனார் கலியபெருமாள் பெயரில் இல்லாததால் அந்த சமயத்தில் பிரதிவாதியின் அனுபோத்தில்தான் இருந்து வந்தது என்பதாலும் வழக்கு சொத்தானது எனது தகப்பனார் கலியபெருமாள் அனுபோகத்தில் இல்லாததால் அவர் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சொத்து எனக்கு சொந்தமானது இல்லை என பிரதிவாதி தரப்பில்ஆட்சேபணை செய்வதால் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல், வசப்பரிகாரம் மட்டும் கோரியிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

10. கால வரையறை சட்டத்தின்படியும், விளம்புகை பரிகாரம் கோராததாலும், நான் கேட்கின்ற வசப்பரிகாரம் சட்டப்படி எனக்கு கிடைக்காது என்பதால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.06.17 16:05:26 +0530

District Munsif
Mannargudi.